# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 05 திங்கட்கிழமை 21 09 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 298


# தென்பகுதியில் தீவிரவாதிகள் மீள அணிதிரளுகின்றனர்!

## புலனாய்வு அறிக்கைகள் தகவல்

கொழும்பு, செப்டம்பர் 21

ஜே. வி. பியின் கடும் தீவிரவாதிகளான தேசப்பிரேமி ஜனதா வியாபாரய (டி. ஜே வி) அமைப்பைச் சேர்ந்தவர்கள் தென்பகுதியில் மாவட்ட மட்டத்தில் மீண்டும் அணி திரளுவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தென்பகுதியில் தீவிரவாதம் உச்சக்கட்டத்தில் இருந்த போது தலைமறைவான டி. ஜே வி. அமைப்பின் தீவிர உறுப்பினர்கள் தற்போது மாவட்ட மட்டத்தில் புதிய உறுப்பினர்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். என்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்ததாக 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படை மீது தாக்குதல் நடத்த

## அதிவேகப் படகுகள் அணி புலிகள் பெற்றுள்ளனராம்!

கொழும்பு, செப். 21

அரச படையினருக்கு —குறிப்பாக கடற்படையினருக்கு— எதிரான தமது தாக்குதல்களை விஸ்தரிக்க, அதிவேகப்படகுகள் அணி ஒன்றையும் அதற்கான வெளிநாட்டு நிபுணத்துவத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

வடபகுதிக் கடலில் ஸ்ரீலங்காக் கடற்படையின் செயற்பாடுகளை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கடற்புலிகள், வெளிநாட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடற்படைத் தளம் புலிகளால் தாக்கப்படலாம்!

### படையினர் எச்சரிக்கப்பட்டுள்ளனராம்

கொழும்பு, செப். 21

விடுதலைப் புலிகள் தாம் கைப்பற்றிய — ஸ்ரீலங்கா கடற்படையின் 30 அடி நீள அதிவேக படகைப் பயன்படுத்தி திருகோணமலைக் கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தும் சாத்தியம் இருப்பதாகவும் —

கடற்புலிகளின் இத்தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு கடற்படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கைப்பற்றப்பட்ட ரோந்துப் படகைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா படையினர் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவது நிச்சயம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-எ)

பண்டத்தரிப்பு சில்லாலையிலிருந்து

## பின்வாங்கிய இராணுவம் மிதிவெடிகளைப் புதைத்தது

யாழ்ப்பாணம், செப். 21

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் பண்டத்தரிப்பு விளான் பகுதிகளில் மேற்கொண்ட "சதுரங்கம்" இராணுவ நடவடிக்கையின் போது பல இடங்களில் மிதிவெடிகளைப் புதைத்திருக்கிறார்கள்.

ஆகையால் அப்பகுதிகளுக்கு செல்வோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

"சதுரங்கம்" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் பண்டத்தரிப்பு— மாதகல் சந்திப்பகுதி. சில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "என்னை சிறையில் அடைத்தாலும் புலிகள் ஆதரவுப் போர் தொடரும்"

### தமிழ்த் தேசியகட்சித் தலைவர் நெடுமாறன் அறிவிப்பு

கைது செய்யப்படுவதற்கு முன்னர் 'உதயன்' இதழுக்கு அவர் சென்னையில் வைத்து அளித்த விசேட பேட்டியின் விவரம் நாளை வெளியாகும்.

தியாகி திலீபன் நினைவாக

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று 300 மாணவர்கள் சிரமதானம்

யாழ்ப்பாணம், செப் 21

தியாகி திலீபனின் நினைவு தின நிகழ்வுகள் நேற்றும் குடாநாட்டின் பல இடங்களிலும் மற்றும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு. ஆகிய வெளிமாவட்டங்களிலும் சிறப்பாக நடந்தன.

குடாநாட்டில் கோட்ட, வட்ட ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

நேற்றும் பல இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். போதனா வைத்திய சாலையைத் துப்புரவு செய்யும் சிரமதானப் பணியில் 300 க்கும் மேற்பட்ட மாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். குடாநாட்டில்

## 482 தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்

### கல்விச் சேவை ஆணைக்குழு அனுமதி

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தில் 482 தொண்டர் ஆசிரியர்களுக்கு இம் மாதம் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனங்களை வழங்க கல்விச் சேவை ஆணைக் குழு யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கல்விச்சேவை ஆணைக் குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதையடுத்து, நிரந்தரமாக்கப்படவிருக்கும் தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலையும், நியமனக் கடிதங்களை வழங்கும் படிவங்களையும் யாழ். கல்விப் பணிப்பாளர் எடுத்து வந்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ தீவிரவாதியின் சூட்டுக்கு தமிழக இன்ஸ்பெக்டர் பலி!

### கான்ஸ்டபிள் படுகாயமுற்றார்

சென்னை, செப். 21

இலங்கைத் தீவிரவாதி என்று சந்தேகப்படும் ஒருவரால் தமிழ்நாடு சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்; அச்சம்பவத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்.

மதுரைக்கு அருகே உள்ள கூடல்நகருக்கு பக்கத்தில் சனி இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

அங்குள்ள இலங்கை அகதி முகாம் அருகே ஓட்டோவில் சென்ற ஒருவரை ரோந்து சென்ற சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியும், கான்ஸ்டபிள் ராஜனும் வழி மறித்து விசாரிக்க முற்பட்டபோது;

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாரின் சூட்டுக்கு கத்தோலிக்க மதகுரு பலி!

### திருமலையில் சம்பவம்

திருகோணமலையில் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கத்தோலிக்க மதகுரு ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை நகருக்கு வெளியே உள்ள வீதித்தடை சோதனை முகாம் ஒன்றில் ஏற்பட்டது.

படையினரின் சோதனைக்காக மேற்படி மதகுரு தடை முகாமுக்கு அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கினார் என்றும்—

அப்போது கடமையிலிருந்த பொலீஸ்காரர் ஒருவரின் துப்பாக்கி வெடித்தது என்றும் —

அந்தச் சூட்டுக்கு இலக்காகி மதகுரு உயிரிழந்தார் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

அருட் திரு பீற்றர்ஸ் டிமா என்பவரே உயிரிழந்த மதகுரு ஆவார்.

(உ-எ-10)

**குளங்களைத் திருத்துவோம் வளங்களைப் பெருக்குவோம்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாளை முதல் கொழும்பில் பாதுகாப்பு உயர் மாநாடு

## வெளிநாட்டு அதிகாரிகள் பங்குபற்றுவர்

கொழும்பு, செப். 21
பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பான மாநாடு ஒன்று இன்று முதல் எதிர்வரும் வியாழக்கிழமை 24 ஆம் திகதி வரை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, டொங்கோ, நியூசிலாந்து, இலங்கை, பிஜி, கொரியா, பிலிப்பீன்ஸ், தாய்வாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சிரேஷ்ட படைஅதிகாரிகளும் சிவில்அதிகாரிகளும் இந்த கருத்தரங்கில் பங்குபற்றுவர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த மாநாட்டை ஒட்டி, ஹில்டன் ஹோட்டலின் மேல் மாடி ஒன்று வழமையான பாவனைக்கு மூடப்பட்டிருப்பதாகவும் —

அங்கு இராணுவத்தினர் சிவில் உடையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-த-5)

# வங்கியாளர் பரீட்சை மீண்டும் வடக்கில்!

யாழ்ப்பாணம், செப். 21
மூன்றாண்டுகால இடைவெளிக்குப் பின்னர் இலங்கை வங்கியாளர் பரீட்சை, மீண்டும் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும், இலங்கை வங்கி வட மாகாண முகாமையாளர் திரு. எஸ். கனகரத்தினமும் இலங்கை வங்கியாளர் நிலையத்தின் நிர்வாகத்துடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று இலங்கை வங்கியாளர் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3)

# 4 யானைகளைக் கொன்ற 6 முஸ்லிம் ஊர்காவலர் கைது!

கொழும்பு, செப். 21
நான்கு யானைகளைச் சுட்டுக் கொன்று, அவற்றின் தந்தங்களை அகற்றிய சம்பவம் தொடர்பாக பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த ஆறு முஸ்லிம் ஊர்காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 303 ரக ரைபிள்கள் கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட யானைகளில் இருந்து அகற்றப்பட்ட தந்தங்கள் வாழைச்சேனையில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வெலிக்கந்த பொலீஸ்பகுதியில் உள்ள குடாபொக்குண, சரபொலை ஆகிய இடங்களில் இறந்த யானைகளின் அழுகிய உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன; ரைபிள் சூட்டுக் காயங்கள் அவற்றில் காணப்பட்டன. (உ-எ)

# கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 21
9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். கல்வி அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்கள் கோட்ட ரீதியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் —

கடந்த வருடம் இந்த பரீட்சைக்கு தோற்ற முடியாது போன மாணவர்களும் இம்முறை தோற்ற பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (உ-3)

# அம்பாந்தோட்டை கடற்கரையில் விமானம் விழுந்து நொறுங்கியது!

## விமானி உயிர் தப்பினார்

கொழும்பு, செப் 21
தனியாருக்குச் சொந்தமான இரண்டு ஆசனங்களைக் கொண்ட 'செஸ்னா' பயிற்சி விமானம் ஒன்று வீரவிலவுக்குச் செல்லும் வழியில் அம்பாந்தோட்டை கடற்கரையில் மோதி நொறுங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் விமானத்தில் இருந்த பயிற்சி விமானி உயிர் தப்பினார்.

நொறுங்கிய விமானத்தில் இருந்து அவ்விமானியால் எழுந்து நடந்து செல்ல முடிந்தது என்று விமானப் போக்குவரத்து அதிகாரிகள் கூறினார்கள்.

தொழில் நுட்பக் கோளாறு காரணமாக விமானம் விழுந்து நொறுங்கியதாகக் கருதப்படுகிறது. விமானத்தின் சிதைவுகளைக் கொழும்புக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எச். ஐ ஜிப்ரி என்ற (19 வயது) விமான ஓட்டியே இந்த விபத்துச் சம்பவத்தில் உயிர் தப்பியவராவார். (உ-எ-3)

# ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன

யாழ்ப்பாணம், செப். 21
அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் 'குமண' கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டன.

அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த 2 ஆயிரம் பேரின் அடையாள அட்டைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. (உ-3)

# இலங்கை வங்கி கிளைகளில் எழுதுவினைஞர் நியமனம்

யாழ்ப்பாணம், செப் 21
யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு சுமார் 25 எழுதுவினைஞர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படவிருப்பதாக அறிய வந்தது.

வங்கியாளர் போட்டிப் பரீட்சையில் தேறி இதுவரை நியமனம் வழங்கப்படாமல் இருப்போருக்கே தற்போது நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை தம்முடன் எடுத்து வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —
பொது எழுதுநர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஆறு பேருக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளையில் நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

மக்கள் வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளில் நிலவும் வெற்றிடங்கள் குறித்து, மக்கள் வங்கி நிர்வாகம் கூடி ஆராய்ந்த பின்னரே முடிவு செய்யப்படும் என அரச அதிபருக்கு கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாம். (உ-3)

# இளவாலை, மாதகலுக்கு புதிய உதவி அரச அதிபர்

படையினர் கைப்பற்றியிருக்கும் இளவாலை, மாதகல் பகுதிகளுக்குப் பொறுப்பான உதவி அரச அதிபராக திரு. எஸ். ஜெரோம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சில் கடமையாற்றும் இவர் இனிமேல் இளவாலை, மாதகல், அளவெட்டிப் பகுதிகளின் சிவில் நிர்வாக, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கொள்ளையிடச் சென்ற

# சிப்பாய் மோதலில் பலி! சட்டத்தரணி படுகாயம்!!

கொழும்பு, செப். 21
இரத்தினபுரியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையிடச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அங்கு வீட்டாருடன் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தார். கொள்ளையர் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற சட்டத்தரணியும் மற்றொருவரும் படுகாயமுற்றனர்.

அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்த சிப்பாய் இராணுவத்திலிருந்து தலைமறைவாகியவர் என்றும் —

படுகாயமுற்ற கொள்ளையர் குழுத் தலைவரான சட்டத்தரணி மிகவும் ஆபத்தான நிலையில் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் —

அவர் இன்னமும் நினைவு திரும்பாத நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

உயிரிழந்த சிப்பாயின் சடலத்தை அடையாளம் காட்டிய அவரது மனைவி சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# கஞத்துறைக் கைதிகளை அரச அதிபர் சந்தித்தார்

யாழ்ப்பாணம், செப். 21
களுத்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளில் ஒரு பகுதியினரை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேரடியாக சந்தித்துப் பேசினார்.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் அங்கு தங்கியிருந்த போது களுத்துறை முகாமுக்கு விஜயம் செய்து கைதிகளைச் சந்தித்தார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் சிலர் தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களையும் அரச அதிபர் எடுத்து வந்துள்ளார்.

களுத்துறை, கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியலையும் அரச அதிபர் எடுத்து வந்துள்ளார். (உ-3)

# எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

அரச பொது எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன. மேற்படி பரீட்சை இம்மாதம் நடைபெற முன்னர் ஏற்பாடாகி இருந்தது. (த-162)

# யானைகளை விரட்டியடிக்க படையினர் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, செப். 21
வரட்சி காரணமாக மண்டூர்க் கிராமத்தை நோக்கிப் படையெடுக்கும் காட்டு யானைகளை விரட்டி அடிக்க மண்டூரில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். ஆனால் அந்த முயற்சி பலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்டூர்க் கிராமத்திற்கு வந்து வாவியில் படுத்திருந்த யானைகளில் ஒன்று, துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை கேட்டு அங்குள்ள பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்துக்கு முன்பாக வந்து நின்றது.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23-02-1954

உதிர்வு: 21-09-1989

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்
உடற்கூற்றியல் துறைத் தலைவர்
வைத்திய கலாநிதி
இராஜினி திராணகம
M. B. B. S. (Cey), P. H. D (Liverpool)

பல்லாயிரம் அறிவுக் கண்களுக்கு
ஒளிதந்திட்ட
சூரியனை இழந்து
சூனியத்தில் வாழ்கின்றோம்
துக்கற்ற கல்விக் கடலில் இருந்து
கரை சேர்ந்திட உதவிய
விளக்கினை இழந்து
கடலினில் தத்தளிக்கின்றோம்.

மருத்துவ பீட மாணவர்கள்.

(22615)



A/L
கிறீஸ்தவம்
திருமதி A. மல்லிகா B.A.
'அப்போஸ்தலர் பணி'
ஆரம்பம்:
22-09-1992
செவ்வாய் 3-00 பி.ப.
SHAMROCK
சுன்னாகம்
(22614)



## தவறிவிட்டது

வல்வெட்டித்துறையிலிருந்து நாயன்மார்கட்டிற்கு வரும் பாதையில் ஆலய தேவைக்காக எடுத்து வரப்பட்ட 15 தோலா நிறையுள்ள வெள்ளிப்பாளம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அரசடிப் பிள்ளையார் கோவில்,
நாயன்மார்கட்டு.

(22616)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible]
யாழ்ப்பாணம்

# அடகு வைத்த நகை குறித்து வாடிக்கையாளர்கள் கவலை!

அச்சுவேலி, செப் 21

இலங்கை மக்கள் வங்கியில் நகைகளை அடகு வைத்த வட பகுதி வாடிக்கையாளர்கள் தமது நகைகளின் நிலை குறித்து பெரும் கவலையும், குழப்பமும் அடைந்துள்ளதாக அறியவருகிறது.

வட பகுதி மக்கள் குறிப்பாக விவசாயிகள் 1986ஆம் ஆண்டுக்கு முந்தைய காலப் பகுதியில் நிதி நெருக்கடியை போக்குவதற்கு மக்கள் வங்கியில் தமது நகைகளை அடகு வைத்துப் பணம் பெற்று வந்தனர்.

ஆனால் அடுத்து வந்த காலப் பகுதியில் வடக்கில் சிவில் நிர்வாகம் சீர் குலைந்ததை அடுத்து நகைகளை மீள் அளிப்பதில் சிரமங்கள் எதிர் நோக்கப்பட்டன. இதனால் அடகு வைத்தோர் சங்கம் மறியல் போராட்டம் நடத்தியது.

அதனைத் தொடர்ந்து பணம் செலுத்திய அடகு நகைகளில் ஒருபகுதி 1990ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ். கோட்டை பொலீஸ் நிலையத்தில் வைத்து உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

ஆனால் மிகுதி நகைகளை வழங்க இதுவரை பொருத்தமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என அடகுவைத்தவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மக்கள் வங்கி அடகு நகைகள் கொழும்பில் ஏல விற்பனை செய்யப்படும் என்று வெளியாகி உள்ள செய்திகள் அடகுவைத்தவர்களை மேலும் கவலை கொள்ளச் செய்துள்ளது.

தற்பொழுது யாழ். குடாநாட்டில் வங்கிகள் சீராக நடைபெறுகின்ற போதிலும், அடகு நகை விடயத்தில் மக்கள் வங்கி பொருத்தமான நடவடிக்கை எடுத்து அடகு நகைகளை யாழ்ப்பாணம் கொண்டு வர முயற்சிக்குமா என்று மக்கள் கேட்கின்றனர்.

(த 11)

## 56 சிங்களக் குடும்பங்களுக்கு மீள குடியமர்தல் நிவாரணம்

வாழைச்சேனையில் உள்ள வாழவாடிக் கிராம முகாமில் தங்கியிருந்த 56 சிங்களக் குடும்பங்கள் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட்ட பின் குடியமர்த்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களுக்கு உதவுவதற்கென 24 நலன்புரி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நலன்புரி நிலையங்களின் கண்காணிப்பின் கீழ் 2 ஆயிரத்து 519 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 57 பேர் தங்கியுள்ளனர். (த-5)

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**A/L**

**1993 Aug.**
**1992 Aug.** இல் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான

பகல் நேர வினா-விடை
வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.
[செவ்வாய், வியாழன்]

**பிரிவு: I**

பொருளியல்: திரு. க. கலாகரன் 8-00 — 9-30 மணி
அளவையியல்: திரு. A. பிரபா 9-30 — 11-00 மணி
வர்த்தகம்: திரு. R. இரகுநாதன் 11-00 — 12 30 மணி
கணக்கியல்: திரு. S.K. பிரபாகரன் 12-30 — 2 00 மணி

மாலை நேர வகுப்புக்கள்
தமிழ்: திரு. குழந்தைவேல் 3-00 — 4-00 மணி
இ. நாகரிகம்: திரு. காரை. சுந்தரம்பிள்ளை 4-00 — 5-00 மணி

**பிரிவு: II**

அலகு ரீதியான (முழுப்பாடத்திட்டம்)
வகுப்புக்களுக்கான நேர அட்டவணை
[செவ்வாய், வியாழன்]

8-00 — 9 00 அளவையியல்
9-30 — 11-00 பொருளியல்
11-00 — 12-30 கணக்கியல்
12-30 — 2-00 வர்த்தகம்

மாலை நேர வகுப்பு
3-00 — 4-00 தமிழ்
4 00 — 5-00 இந்துநாகரிகம்

★ எமது மாணவரின் சிறந்த பெறுபேறுகளே எமது உத்தரவாதம்.

[சி-3395]

## புதிய சட்டம்

கொழும்பு, செப் 21

ஏற்றுமதிப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நாசப்படுத்தும் எண்ணத்துடன் கதைத்தல், கேட்டல், எழுதுதல், வசனை அல்லது கார்ட்டூன் படம் மூலம் வெளிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை முற்றாகத் தடை செய்யும் புதிய சட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

இதனை மீறும் எவரும் ஜூரிகள் இல்லாத உயர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு 20 வருடங்களுக்கு மேற்படாததும் 10 வருடங்களுக்குக் குறையாததுமான தண்டனை வழங்க இச்சட்டம் நீதிமன்றுக்கு அதிகாரம் அளித்துள்ளது. [த-10]

## இடம்பெயர் சேவை திருமலையில்

அடுத்த ஜனாதிபதி இடம்பெயர் சேவை திருகோணமலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்தெனியாவில் ஜனாதிபதி இடம்பெயர் சேவையை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி பிரேமதாஸா இத்தகவலை வெளியிட்டார்.

[த-எம]

## மரணப் பணிக்கொடை

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் விவசாயக் காப்புறுதிச் சபை யாழ். மாவட்டத்தில் மேலும் இருவருக்கு மரணப் பணிக்கொடைகளை வழங்கியுள்ளது.

தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி வே. இராஜேஸ்வரி, புத்தூரைச் சேர்ந்த திருமதி ந. நாகநந்தினி ஆகிய இரு கைம்பெண்களுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாய ஓய்வூதியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் யாழ் மாவட்டத்தில் இதற்கு முன்னர் 14 பேருக்கு மரணப் பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

## பன்முகப்படுத்தப்படும்

கொழும்பு, செப். 21

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பிரதேச செயலக மட்டத்தில் பன்முகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

### திலீபன் நினைவாக:

# இன்று இடம்பெறும் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், செப். 21

உணர்வுபூர்வமாக இடம்பெற்றுவரும் தியாகி லெப்டினன்ட் கேர்ணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவையொட்டிய வைபவங்களின் ஏழாவது நாளான இன்று சிரமதானப்பணிகள் நடைபெறவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:

தீவகக் கோட்டம்— யாழ். ரயில் நிலையம். அப்பகுதியில் வசிக்கும் மக்களால் துப்புரவு செய்யப்படும்.

வலிகாமம் கோட்டத்தில்— நல்லூர் வட்டத்தில் கொக்குவில் சந்தியில் ஆரம்பித்து நந்தாவில் குளத்தில் சென்று முடிவடையும் ஆயிரம் மீற்றர் நீளமான நந்தாவில் வாய்க்கால் துப்புரவு செய்யப்படும்.

சங்கானை வட்டத்தில்— வட்டுக்கோட்டை வீதியில் உள்ள பள்ளங்கள் நிரப்பப்படும்.

வடமராட்சிக் கோட்டத்தில்— ஐயனார் கலட்டி வீதி கலைஞர் வட்டத்தினரின் உதவியுடன் அப்பகுதி மக்களால் துப்புரவு செய்யப்படும்.

கரவெட்டி வட்டத்தில் நெல்லியடி மகாத்மா வீதியில் உள்ள குப்பைகள் நெல்லியடி மக்களால் அகற்றப்படும். தனியார் கல்வி நிறுவனங்களும் அதில் இணைந்து செயற்படும்.

இதேவேளை— விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மருதனார்மடம் கோட்ட அங்கத்தவர்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும்—

வடமராட்சி கோட்ட அங்கத்தவர்கள் மந்திகை வைத்தியசாலையிலும்—

தென்மராட்சி கோட்ட அங்கத்தவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் சிரமதானப் பணியில் ஈடுபடுவர். [த-5]

## மட்டக்களப்பு நகரத்தில் தீவிர பொலீஸ் சோதனை

கொழும்பு, செப். 21

மட்டக்களப்பு நகரில் இருந்து வெளியே செல்வோர் பொலீஸாரினால் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென மட்டக்களப்பு நகரின் கோட்டை முனைப் பாலத்தில் அதிக எண்ணிக்கையான பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் சோதனை நடவடிக்கைகள் அப்பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

### மட்டு. கோறளைப்பற்றில்

## நெல்லை சந்தைப்படுத்த விவசாயிகள் திண்டாட்டம்

கொழும்பு, செப். 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோறளைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 50 தமிழ் விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக அப் பகுதியில் விவசாய நடவடிக்கையை மேற்கொண்டு வரும் மேற்படி விவசாயிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும்—

இதனால் விவசாய அடையாள அட்டையை பெறமுடியாத நிலையில் இருக்கும் அவர்கள் தாம் உற்பத்தி செய்த நெல்லை சந்தையில் விற்க இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஹெல உறுமய அணித் தலைவர் விவகாரம்:

## சிறிமாவிற்கு முட்டுக்கட்டை போடுகிறார் அனுரா!

ஹெல உறுமய அணித் தலைவரும் களுத்துறை மாவட்ட எம்.பியுமான திலக் கருணாரத்தினாவை சுதந்திரக்கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைக்கும் முடிவை திருமதி பண்டாரநாயக்கா அமுல் செய்யாதவாறு தடுப்பதில் திரு. அனுரா பண்டாரநாயக்கா தலைமையிலான குழுவும்சக்தி வாய்ந்த ஹெல உறுமய குழுவும் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியின் கிரேஷ்- வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (த-எ)

## அனுரா கண்டனம்

கொழும்பு. செப். 21

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து 'ஹெல உறுமய' அணித்தலைவர் திலக் கருணாரத்ன இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா கண்டித்துள்ளார்.

கட்சியை பலப்படுத்த வேண்டிய நேரத்தில் கட்சிக்குள்ளே கருத்து வேறுபாடுகளைக் கிளப்பக் கூடிய நடவடிக்கைகள் இடம் பெறுவது பொருத்தமானதல்ல என அனுரா அண்மையில் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். [த-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, மாடநெறி, பொதுவிவேகம், மொழித்திறன். ஆக்கம்: T. லோகநாதன் BA., எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(சி-3388)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றியீட்டுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! தினமும் காலை (8-30 — 12-30) த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், இல 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை இல 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [தினமும் பிற்பகல் 3-00 முதல் 6 00வரை].
[22606]

### ஏமாந்து விடாதீர்கள்!

"கோப்பாய் — சிவம்' எழுதிய ''சைவாலயக் கிரியைகள்'' புதிய பதிப்பு வெளி வந்து விட்டது. முந்திய தடவை தவறவிட்டது போல் இம்முறையும் ஏமாறாமல் இப்போதே வாங்கிவிடுங்கள். சொற்ப பிரதிகளே உள்ளன. எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [சி-3390]

### நளவெண்பா

ஆண்டு 10,11 வகுப்புகளுக்குரிய நளவெண்பா தொகுப்புரை வெளிவந்துவிட்டது. ஆக்கம்: எஸ். பாலா. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
[சி-3503]

### வர்த்தகமும் கணக்கீடும்

200 மாதிரி பல்தேர்வு வினாக்களையும்-விடைகளையும் கொண்ட வர்த்தகமும், கணக்கீடும் [ஆண்டு 9,10,11] வெளிவந்துவிட்டது. விலை 30/- ஆக்கம்: எஸ் ராஜன், B.Com. எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [சி-3502]


## தென்னங்கன்று விநியோகம்

அரியாலை, செப்,21

யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ரூபா பத்து மானிய விலையில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தென்னங்கன்றுகளைப் பெற விரும்புவோர் மேற்படி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று யாழ். உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (த-17)

## சைக்கிள் திருட்டு

அரியாலை, செப். 21

கொழும்புத்துறை, பேற்று, ஈச்சமோட்டைப் பகுதிகளில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளில் பூட்டிவைக்கப்பட்ட லேடிஸ் சைக்கிள்களே பெரும்பாலும் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த 17)

### வடபகுதி யுத்தத்தில்

# டாங்கிகள் அறிமுகம் செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகின்றதாம்

## இராணுவத் தளபதி சொல்கிறார்

கொழும்பு, செப் 21

வடபகுதி யுத்தத்தில் இராணுவ டாங்கிகள் அறிமுகம் செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தி அடையும் இவ்வேளையில் சதுரங்க இராணுவ நடவடிக்கை இடம் பெற்றதாகவும் —

இதில் செக்கோஸ்லேவேகியா ரி 55 ரக டாங்கிகள் பெரும் பங்கை வகித்தன என்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா குறிப்பிட்டார்.

இதுவரை பயன்படுத்தப்பட்ட சீன போர் டாங்கிகளிலும் பார்க்க செக்கோஸ்லேவேகிய டாங்கிகள் சிறந்த பலனைத் தருவதாகவும் அவர் கூறினார்.

தேர், குதிரை, யானைப் படைகளையும், காலாட் படைகளையும் கொண்டு போராடிய வரலாற்றை நினைவு கூரும் வகையிலேயே இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'சதுரங்க நடவடிக்கை' என்று பெயரிடப்பட்டதாகவும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா கூறினார். [த-எ]

## பிரேமாவைக் கொல்ல சதியாம்!

கொழும்பு, செப். 21

''என்னைக் கொல்ல சதி முயற்சி நடக்கிறது''—.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா பள்ளேகலையில் பதினேழாவது ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார். [த-எ]

## தற்போதைய இராணுவ நடவடிக்கை குறித்து ஜெரி சில்வா விளக்கம்

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் மீது நிர்ப்பந்தத்தைப் பிரயோகிப்பதே தற்போதைய யுத்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாறு வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா, பண்டத்தரிப்பில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பரேஷன் சதுரங்கம்' இராணுவ நடவடிக்கையின் மத்தியில் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இராணுவத்தினர் உறுதியாகவும், கட்டுக்கோப்புடனும் தற்போது யுத்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார். [த-எ]

## காங்கேசன்துறையிலும் விரைவில் பொலீஸ் நிலையம்

### ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்

கொழும்பு, செப். 21

காங்கேசன்துறையில் பொலீஸ் நிலையம் ஒன்றைத் திறப்பதற்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஊர்காவற்றுறையில் இயங்கி வரும் பொலீஸ் நிலையத்தின் தரத்துக்கு சமமானதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் கடமையாற்றுவதற்குத் தமிழ் பேசும் பொலீஸார் இல்லாதிருப்பது பொலீஸ் திணைக்களத்துக்குப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]


**C. C. A.**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

வங்கி ஊழியர்களுக்கான கணக்கியல் வகுப்பு

திரு. ஸ்ரீ
B. Com [Hons]

திங்கள், புதன் வெள்ளி

ஆகிய நாட்களில் 4-6 வரை. பாடத்திட்டம் ஆரம்பத்தில் இருந்து போதிக்கப்படும்.

★ விபரங்களுக்கு நேரில்

[சி-3392]

பல்கலைக்கழக மாணவரின் ஆய்வுக் கட்டுரைகள்

அட்டைகள்
அழகுற அச்சிட்டு
பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய

கட்டி [பையின்ட் செய்து]
உரிய நேரத்தில் எடுப்பதற்கு

யாழ். நகரில்
அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த ஒரே இடம்

பாரதி பதிப்பகம்
A. B. PRINTERS
430, காங்கேசன்துறை வீதி,
[யாழ் இந்துக் கல்லூரி, சிவதொண்டன் நிலையம் ஆகியவற்றுக்கு அருகில்]
யாழ்ப்பாணம்.
[சி-3385]

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்

A/L 93
DAY CLASS

★ கணக்கியல்
திரு. ராஜன்
B Com (Hons)
(i) அடிப்படை கணக்கியல்
(ii) கம்பனிக் கணக்கியல்

ஆரம்பம்:
22 - 09 - 1992
செவ். 10 00 a m.
[சி 3400]


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 20 — 07 — 1947 | 16 — 10 — 1987 |

**கந்தசாமி சண்முகநாதன்**
(பேபி)

திதி: 21 — 09 — 1992

என் முகத்தில் நீர் ஓட விட்டுச் சென்று விட்டாய்
உன் பிரிவை மீட்டு விட்டால் எம் வாழ்வில் குறையேது
உன் வரவை எதிர்பார்த்து தினம் விழியைத்-
திறக்கின்றோம்
ஐந்தாண்டு ஆனாலும் நாம் உம்மை பிரியவில்லை.

- இந்திரா குடும்பத்தினர்.

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி.
[22610]

## முதலாம் வருட நினைவஞ்சலி



| உதிப்பு: | உதிர்வு: |
|---|---|
| 02 — 11 — 1933 | 03 — 10 — 1991 |

அமரர்
**கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்**
[உரிமையாளர்: யாழ். போசனசாலை – கொழும்பு, லிங்கம் அரிசி ஆலை, சுந்தரம் ஸ்ரோர்ஸ், வட்டக்கச்சி]

திதி: 21-09-1992

இதயம் ஒன்று எங்களுள் இருக்கும் வரை
உதயமாகிக் கொண்டிருக்கும் ஓர் அன்பு ஒளி
ஓராண்டு நிறைவுறும் இவ்வேளையிலே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

83/16, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-3290]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மேலும் கொதிக்கும்!

தமிழகத்தில் அரசியல் புயல் ஒன்று கிளம்பியிருக்கிறது.

அரசியல் தலைவர்கள் ராமதாஸ், பண்ருட்டி, நெடுமாறன் ஆகியோரும் மற்றும் கட்சி அங்கத்தவர்களும் கைது செய்யப்பட்டதன் விளைவாக அங்கு அரசியல் குழப்பம் ஒன்று தோன்றியுள்ளது.

சரியாகச் சொல்வதானால் மாநில அரசாங்கமே குழப்பத்துக்கு வித்திட்டிருக்கிறது. அதன் பெறுபேறாக அங்கு வன்செயல்களும் முன்நின்றன.

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது. அதனை மீறி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியது, இந்தியாவுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசியது ஆகிய காரணங்களைக் காட்டியே தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஈழத் தமிழரின் போராட்டத்துக்குத் தமிழகத்தில் ஆதரவு பெருகுவதற்கு இடம் கொடுத்தால், தமிழக மக்களுக்கும் தமது உரிமைகளைப் பூரணமாகப் பெற வேண்டும் என்ற உணர்வு தீவிரமாகி விடும். அதன் பின்னர் தமிழகத்திலும் தனிநாட்டுக் கோரிக்கை மீண்டும் துளிர்த்து விடும் என்ற அச்சம் இந்திய மத்திய அரசின் அடி நெஞ்சை நீண்ட காலமாகவே நெருடி வருகிறது.

அதனாலேயே தமிழீழம் அமைவதை இந்தியா விரும்பாமல் அதற்கு எதிராக ஆரம்பம் முதலே செயற்பட்டு வருகிறது. ராஜீவ்காந்தி அவசரப்பட்டு ஜே. ஆருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது கூட, தமிழீழம் மலராமல் தடுத்துவிடுவதற்கே. விடுதலைப் புலிகளைத் தடை செய்த பின்னரும் தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் போராட்டத்துக்கு ஆதரவு உண்டு அல்லது வளர்கிறது என்பதனைப் பார்க்க இந்திய அரசினால் சகிக்க முடியவில்லை. பொறுக்க முடியவில்லை. உணர்ச்சி மீறி அதற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்திருக்கிறது! அந்த ஆத்திரத்தின் விளைவே அரசியல் தலைவர்களைச் சிறை வைக்கும் நடவடிக்கை.

ஆனால், இந்திய மத்திய அரசோ அல்லது ஜெயலலிதா அரசோ நினைப்பது போல, தமிழக மக்களின், தமிழர் என்ற இரத்த உணர்வையும், ஈழத் தமிழருக்கு ஆதரவுதரும் மனதையும் வட இந்திய ஆரிய அடக்குமுறையாளர்களால் தடுத்துவிட முடியாது.

சிங்கள ஆரியர்கள் இலங்கையில் தமிழர்களை அடக்கி ஆள்வதற்குக் கடந்த 45 வருடங்களாக முயல்கிறார்கள்; முடியவில்லை. தமிழர்கள் அடிபணியாது போராடி வருகிறார்கள். எண்ணிக்கையில் கூடிய தமிழகத் தமிழர்கள் எப்படி வட இந்திய (ஆரியரின்) அடக்குமுறைக்கு அடிபணிவார்கள்; அடிபணிய முடியும்?

தமிழகத்தில் இப்போது அரசு எடுக்கும் நடவடிக்கை அங்கு நிலைமையை மோசமாக்குமே, தமிழர்களைத் தீவிரவாதிகள் ஆக்குமேயன்றி, சாந்தப்படுத்தாது. அதாவது தமிழகம் மேலும் கொதிக்கப் போகிறது என்பதற்கான ஆரம்ப அறிகுறியே கடந்த வார நிகழ்வுகள்.

இந்திய அரைச் சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தமிழகத்து மக்கள் பூரண சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. அதனை வழங்குமாறு அவர்கள் கொடுக்கும் குரலை மத்திய அரசு மதிக்கவில்லையானால் பின்னர் விலை கொடுக்க நேரிடும். இலங்கையில் தமிழர் பிரச்சினை நாடு பிரியும் கட்டத்திற்கு வந்திருப்பது போல?

---

உலகத் தமிழர்கள் அநாதைகள் அல்லர்

# தமிழர் தமக்கு தன்னுரிமை கேட்பதை பிரிவினை என்று எப்படிச் சொல்வது?

தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் பாட்டாளி மக்கள் கட்சியின் தமிழர் வாழ்வுரிமை மாநாடு இம்மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் கட்சியின் தலைவரும், தமிழக சட்டசபை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பண்ருட்டி ராமச்சந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு இது!

மாநாட்டில் திரண்டிருப்பவர்கள் கூலிக்கு அழைத்து வரப்பட்ட கூட்டத்தினர் அல்லர். கட்டுச் சோற்றுடன் தண்ணீரும் கொண்டு சொந்தச் செலவில் வந்தவர்கள்.

ஜெயலலிதா புண்ணியம் கட்டிக் கொண்டார். பாட்டாளி மக்கள் கட்சி மாநாடு நடக்கிறது. தனியார் பஸ் உரிமையாளர்கள் யாரும் பஸ்களைத் தரவேண்டாம் என்று உத்தரவிட்டார். இல்லை என்றால் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக இன்னும் நிறைய வாகனங்களில் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் வந்திருப்பார்கள்.

### தடுக்க நினைத்தனர்

இந்த மாநாட்டை நடத்த விடாமல் தடுக்க டில்லிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியவர்களும் உண்டு. மழை பெய்யாதா? அப்படியாவது மாநாடு நடைபெறாமல் போகாதா என்று நினைத்தவர்கள் உண்டு. வகுப்புக் கலவரம் தொடராதா என்று ஏங்கியவர்களும் உண்டு.

இந்த மாநாடு அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. வகுப்பு வாதத்துக்கு பாட்டாளி மக்கள் கட்சி பிரதிநிதித்துவம் வகிக்கிறது. இது ஒரு வன்முறைக் கட்சி என்றெல்லாம் இட்டுக்கட்டி இழிந்துப் பேசுகிறவர்கள் மதியில் முகிழ்ந்து வரும் முழுநிலவாக இன்று இந்த மாநாடு திகழ்கின்றது.

இம் மாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேற்றப் போகிறார்கள் என்று இந்திய அரசே கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு கவனமாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

## தமிழீழம் மலரும் போது இந்தியா மருத்துவிச்சி வேலை செய்ய வேண்டும்

### புலிகளுக்கு நாம் ஆதரவு

இங்கு மாநிலத்தில் உள்ள அரசு ஓர் அரசா? இந்த அரசாங்கத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை.

விடுதலைப் புலிகளை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று இங்குள்ள அரசியல் கட்சியினர் போட்டி போட்டுக் கொண்டு சொல்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் ஒரே இயக்கம் பாட்டாளி மக்கள் கட்சி இயக்கம் தான்.

## பண்ருட்டி ராமச்சந்திரன் முழக்கம்

செக்கோஸ்லோவாகியா என்றவொரு சிறிய நாடு. இன்றைக்கு இந்த நாடு செக் என்றும் சுலோவகியா என்றும் தனித் தனி நாடுகளாகப் பிரிந்துவிட்டன.

### தமிழீழம்

தனித்தமிழீழத்தை இன்றைக்கு உலகமே ஒப்புக் கொண்டிருக்கிறது. தமிழீழத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று நாங்கள் இந்திய அரசை வற்புறுத்தவில்லை. ஈழம் மலர்ந்து விட்டது. அதற்கு மருத்துவிச்சி வேலையைச் செய்யுங்கள் என்று தான் சொல்கிறோம்.

தமிழ்ஈழம் மலர்ந்தால் ராமேசுவரத்தில் உள்ள மீனவர்களுக்கு ஏன் கவலை வரப் போகிறது? அங்கே தமிழ் ஈழம் என்றால் கடலும் தமிழ் கடல் ஆகிவிடும். மீனவர்களும் அமைதியாக இருப்பார்கள். இதைச் சொன்னால் என்ன தப்பு?

சோவியத் ரஷ்யாவில் ஒன்றாக இருந்த 15 நாடுகள் இப்போது தனித் தனியாகப் பிரிந்து விட்டன. திருமணத்திற்குப் பிறகு தனித்தனியாகப் பிரிந்து போன சகோதரர்கள் தங்களுக்கு கல்யாணம் செய்யும் போது மட்டும் அத்தனை பேரும் ஒன்றாகக் கலந்து விடுகிறார்கள். தன்னுரிமை கேட்டால் பிரிவினையா?

அது போல தான் தமிழனுக்கு தன்னுரிமை கேட்கிறோம். சரியெனப்பட்டதை நியாயம் என்று தோன்றியதை, நேர்மை என்று தெரிந்ததை சத்தியத்தை உணர்ந்து செய்வதற்கு பாட்டாளி மக்கள் கட்சி தயங்கியதில்லை. தமிழனுக்குத் தன்னுரிமை கேட்பது பிரிவினை அல்ல. அது தமிழருக்கு உள்ள சுய உரிமை.

இவ்வாறு நாங்கள் கேட்டால் தடாவில் தூக்கிப் போடுவோம் என்று மிரட்டுகிறார்கள்.

யாரையும் ஏமாற்றிவிட்டு கோட்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் இயக்கம் அல்ல இது. வன்முறைத் தீயை வளர்த்துவிட்டு இருக்கிறார்களே ஒழுங்காக மக்கள் பிரச்சினை தீர்ந்ததா?

சிறுபான்மை இன மக்களை அயோத்தி பிரச்சினை இன்றைக்கும் மிரட்டிக் கொண்டிருக்கிறதே. அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதா?

### தமிழில் செய்ய முடிந்ததா?

தமிழில் எல்லாக் காரியங்களையும் நம்மால் நிகழ்த்திக் கொள்ள முடிந்ததா? தொலைக்காட்சியில் இந்தி வருகிறது; நமக்குப் புரியவில்லை. சொத்து இருப்பவர்களுக்குத்தான் ஓட்டு என்று அந்தக் காலத்தில் ஒரு சட்டம் இருந்தது. அவர்கள்தான் அரசியல் சட்டம் இயற்றியவர்கள்.

மக்களுக்காகத்தான் சட்டமே தவிர சட்டத்திற்காக மக்கள் அல்ல; காலுக்கு ஏற்ற செருப்பு இருக்கவேண்டுமே ஒழிய செருப்புக்குத் தகுந்த கால் அல்ல.

### புதிய அரசியல் சட்டம் தேவை

ஆகவேதான் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குங்கள் புதிய அரசியல் நிர்ணய சபையை உருவாக்குங்கள் என்கிறோம். எல்லோருக்கும் சம வாய்ப்பு. சம உரிமை. சம வாழ்வு உருவாக்கப்பட வேண்டும். இதுதான் எங்கள் கொள்கை. இதைத்தான் இந்திய அரசியலில் நாங்கள் வைக்கிறோம்.

39 நாடுகளில் தமிழன் வாழ்கிறான். நாம் நடத்துகிற இதுபோன்ற மாநாடு தான் அவர்களுடைய மனப் புண்ணுக்கு ஆறுதல்; அது தான் ஆறுதல் மருந்து.

உலகத் தமிழர் அநாதைகள் அல்லர். ஆதரவற்றவர்கள் அல்லர். வேர் அற்ற மரம் அல்ல. அவர்களுக்கு உற்ற துணைவர்களாக தமிழகத்தில் தமிழர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வை உணர்த்தத்தான்! இதை உணர்ந்தவர்களாக நாமிருக்கிறோம்.

'இந்த மாநாடு நமக்கு ஒரு மிகப் பெரிய திருப்புமுனை. நாம் தொடங்கியிருப்பது பெரிய திட்டம். நமக்குரிய உரிமையை நாம் அனுபவிக்க வேண்டும். பிறர் கொடுத்து நாம் வாங்குவது உரிமை அல்ல.'— என்றார். (அ)

---

# அரசமைப்பை மாற்ற கோருவது குற்றமாகாது

## கருணாநிதி கூறுகிறார்

இந்திய அரசியல் சட்டத்தில் மாற்றம் வேண்டும் என்று கோருவது குற்றமாகாது.

— தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜெயலலிதா அரசுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை மாநில அரசு கைது செய்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாடு நடந்த போது ஏன் கைது நடவடிக்கைகள் இடம்பெறவில்லை? இப்போது ஏன் கைது செய்யப்பட வேண்டும்?''

— இவ்வாறு திரு. கருணாநிதி கேட்டார். (உ-எ)

# ராமதாஸை கைது செய்தது தவறான செயல் அல்லவாம்!

சென்னை, செப் 21

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வரும் பட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸைக் கைது செய்ததில் தவறு ஏதுமில்லை.

மாநில சட்ட அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி சனிக்கிழமை மதுரையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

பட்டாளி மக்கள் கட்சி பிரிவினை வாதத்தைப் பரப்புவதிலும், பிரிவினைவாதிகளுக்கு ஊக்கமளிப்பதில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

# டாக்டர் ராமதாஸ் விளக்கம்

சென்னை, செப் 21

சுயநிர்ணய உரிமை தமிழக மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்கும் தமிழ்நாடு தனியே பிரியவேண்டும் என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு கூட்டுக் குடும்பத்தில் திருமணங்கள் நடக்கும்போது ஒவ்வொரு பிள்ளையும் தனி ஆக [illegible] வேண்டும் [illegible] செய்து [illegible]

— என்றும் அவர் கேட்டார். (உ-எ)

---

# 'குமாரி' கப்பல் தொடர்ந்து சேவையில்

யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் சேவையில் 'குமாரி' கப்பல் மீண்டும் ஈடுபடவிருக்கிறது.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகம் இடைக்காலமாகக் குறைக்கப்பட்டதாலும் —

யாழ். மாவட்டத்தில் கணிசமான அளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாலும் —

'குமாரி' கப்பல் சேவையை இடைநிறுத்த புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்திருந்தது.

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சினதும் மற்றைய அமைச்சுக்களினதும் உயர் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து 'குமாரி' கப்பலில் தொடர்ந்து பொருள்களை அனுப்ப இணக்கம் காணப்பட்டது.

'குமாரி' கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் நடைபெறுவதாகவும் —

தனியார் துறையினர் அக் கப்பலில் கூடுதலாகப் பொருள்களை ஏற்ற வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

உயிரிழந்த

# ஜே.வி.பி. உறுப்பினர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு!

## அந்த அமைப்பு நிதி திரட்டுகிறது

கொழும்பு, செப். 21

1988 - 90 கால கட்டத்தில் தென்பகுதியில் தீவிரவாதம் உச்சக்கட்டத்தில் இருந்த போது உயிரிழந்த அல்லது காணாமற்போன தமது இயக்க உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை ஜே. வி. பி. தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணமற்போன அல்லது உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கவே ஜே. வி. பி. இந்தப் பட்டியலைத் தயாரித்து வருவதாக உயர்மட்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி, கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அப்படியான பட்டியல்களில் ஒன்று, இரத்மலானை ரயில் ஊழியர் சம்பளப் பணக் கொள்ளை தொடர்பாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நேரத்தில் 11 இடங்களில்

# நேர்முகப் பரீட்சைகள் ராணுவத்துக்கு ஆள்திரட்ட!

கொழும்பு, செப். 21

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஆட் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் வியாழனன்று 11 இடங்களில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு, அம்பாறை, பனாகொடை, அநுராதபுரம், கண்டி, காலி, மாத்தறை, மின்னேரியா, குருநாகல், தியத்தலாவை, குருவிற்ற ஆகிய இடங்களில் உள்ள இராணுவ உப தலைமையகங்களிலேயே இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

இராணுவத்தில் சேர விரும்புவோர் இந்த பதினொரு நிலையங்களில் ஏதாவது ஒன்றில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கலாம் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

இதேபோன்று கடந்த மாதம் இராணுவத்துக்கு ஆள் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சை பனாகொடையில் நடைபெற்றபோது இரண்டே இரண்டு பேர் மட்டுமே அதற்கு சமுகம் தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-3]

---

### பின்வாங்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாலை கதிரமாதா தேவாலயப் பகுதி ஆகிய இடங்களுக்கு வந்து, விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பழைய இடங்களுக்குத் திரும்பிச் சென்றிருந்தனர்.

அவ்வாறு திரும்பிச் செல்லும் போது வீதி ஓரங்களிலும், வீட்டு வளவுகளிலும் வானகக் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்பவற்றையும் புதைத்து விட்டுச் சென்றிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு - சில்லாலை வீதியால் சென்று கொண்டிருந்த சொக்கநாதன் என்ற இளைஞர் மிதிவெடியில் அகப்பட்டுக் காயமுற்றார். சண்டிலிப்பாயைச் சேர்ந்த அவர் பயணம் செய்த சைக்கிள் பின்சில்லு வெடித்துச் சிதறியது.

அப்பகுதியில் வேறு இருவரும் மிதிவெடிகளில் சிக்கிக் காயமுற்றதாக அறியவந்தது.

போராளிகள் இராணுவம் வந்து சென்ற பகுதிகளில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றுவதில் நேற்றும் ஈடுபட்டிருந்தனர்.

இதே வேளை படையினர் தங்கள் ''டாங்கிகளை'' தோட்ட வளவுகள் ஊடாகச் செலுத்திச் சென்றதால் பல்லாயிரம் ரூபா பெறுமதியான பயிர்ச்செய்கைகள் நாசமுற்றுவிட்டன.

சேதமுறாத தோட்ட உரிமையாளர்கள் கடந்த இரண்டு நாட்களாகத் தமது விளை பொருட்களை அங்கிருந்து எடுத்து வருகிறார்கள்.

(அ-162-111)

---

### யாழ். ஆஸ்பத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் நேற்று ஈடுபட்டனர். அவர்களுடன் வைத்தியசாலைப் பணியாளர்களும் சேர்ந்து இப்பணியில் ஈடுபட்டனர்.

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் அரியாலை சாம்பன் குடியேற்றத் திட்டத்தையும் —

மூளாய், பளை, மீசாலை நாவற்குழி, அல்வாய் பகுதி மக்கள் அந்தப் பகுதிகளில் உள்ள வீதிகள், கிணறுகளையும் சிரமதானம் மூலம் புனரமைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திலீபன் ஞாபகார்த்தமாக ஆயிரம் மரக்கன்றுகளை நேற்று விநியோகித்தது.

(அ-15-17-30)

---

### அதிவேகப்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் பயிற்சி பெறுவதற்கான உதவியை நாடியுள்ளதாக அவ்வட்டாரங்கள் நம்புகின்றன. என்றும் ஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காரைநகர் கடற்படைத் தளத்தினுள் இரண்டு கடற்புலிகள் ஊடுருவ முயன்றதைப் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்தனர் என்றும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

[உ-எ]

---

## மரண அறிவித்தல்

### திருமதி அக்னேஸ் அகஸ்ரீன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் வித்தியாலயம்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னேஸ் அகஸ்ரீன் 20-09-92 இல் காலமானார். அன்னார் காலம் சென்ற A.S. அகஸ்ரீனின் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், மேரி பிலோமினா (கண்மணி), மேரி ஸ்ரெலா (இராசம்), மேரி மக்டலீன் (தவம்), அலோசியஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), ஜோசபீன் (ராணி UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதர் (சுங்க அதிகாரி, கொழும்பு) மனுவற்பிள்ளை (அத்தியட்சகர் கப்பல் கூட்டுத்தாபனம், கொழும்பு) செகிரர் முருகுப்பிள்ளை (தொழில் நுட்ப உதவியாளர், புத்தளம்), செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சேவியர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி மேரி இரத்தினம் மரியதாஸ் (செல்லமுத்து) ஆகியோரின் சிறிய தாயாரும், லெஸ்லி (பொறியியலாளர், லண்டன்) கலிஸ்ரஸ் (கணக்காளர், கொழும்பு), கியூ (பொறியியலாளர், கப்பல்துறை), அன்றூ ரோகினி, கிங்ஸ்லி, சஜீவ், அஜந்தா, பிருந்தா, பிரசங், டவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (21-09-92) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அலோசியஸ்
(மகன்)

5/11, அச்சுக்கூட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(22613)

---

## போட்டிப் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 21

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் சிறுபணி செய்பவர்களை பொது எழுதுநர் தரம் II 'ஆ' பிரிவிற்கும், தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு 'ஆ' பிரிவிற்கும் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் 'குமண' கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

உரியவர்கள் இன்று தத்தமது அனுமதி அட்டைகளை யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என கல்வித் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-5]

---

## 'குமண' திரும்பியது

யாழ்ப்பாணம் செப். 21

கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களை திருமலையிலிருந்து ஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த ''குமண'' கப்பல்—

கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய மற்றொரு தொகுதி நோயாளர்களையும் ஏற்றிக்கொண்டு நேற்று மாலையே திருமலைக்குப் புறப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற்ற மற்றொரு தொகுதியினரை திருமலையிலிருந்து ஏற்றிக் கொண்டு அது நாளை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-3-15-17-165]

---

### ஈழ தீவிரவாதியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் துப்பாக்கியால் சுட்டார் என்றும்—

அதனால் சப். இன்ஸ்பெக்டர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

கான்ஸ்டபிள் ராஜன் மார்பிலும் காலிலும் ஏற்பட்ட குண்டுக் காயங்களுடன் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தேக நபரைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

[உ-எ]

---

### தென்பகுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமறைவான தீவிர உறுப்பினர்கள் டி.ஜே.வி.யின் இராணுவப் பிரிவின் மாவட்டத் தலைவர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களில் சிலரின் பெயர்கள் புலனாய்வு அதிகாரிகளுக்குத் தெரியவந்துள்ளதாகவும்—

பாதுகாப்புக் காரணங்களுக்காக அப்பெயர்கள் வெளியிடப்படமாட்டாது என்றும் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்படுள்ளது.

[உ-எ]

---

### ஜே வி பி..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து - இரத்தினபுரியில் கைப்பற்றப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

நஷ்டஈடு வழங்க ஜே வி பிக்கு போதிய நிதிவளம் இல்லாததன் காரணமாகவே இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் [illegible] என்றும் அந்த அதிகாரி கூறினார்.

[உ-எ]

---

# பொலீஸ் நிலைய கூரையை பிரித்துத் தப்பிய நடிகர்!

கொழும்பு, செப். 21

பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கந்தானை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சினிமா துணை நடிகர் ஒருவர், பொலீஸ் நிலையக் கூரையைப் பிரித்துக் கொண்டு தப்பிவிட்டார்.

கைதிக்கூண்டில் கைவிலங்கு போட்டபடி வைக்கப்பட்டிருந்த அந்த நபர் எப்படித் தப்பிச்சென்றார் என்பது பொலீஸாருக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

42 வீடுகளில் அந்த நபர் புகுந்து நகைகள், கைக்கடிகாரங்கள், டெலிவிஷன் பெட்டிகள், வீடியோ டெக்குகள் ஆகியவற்றைக் களவாடினார் என்பது விசாரணையின் போது தெரியவந்தது.

[உ-எ]

---

# வரதராஜப் பெருமாள் இப்போது எங்கு உள்ளார்?

## தகவல் வெளியிட இந்திய அதிகாரிகள் மறுப்பு

குவாலியர், செப் 21

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான வரதராஜப் பெருமாள் எங்கு தங்க வைக்கப்பட்டிருக்கிறார் என்ற விவரத்தை வெளியிட இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து விட்டதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள சந்தேரி துறைமுகம் அருகே — சந்திர கோட்டையில் — மலைக்காடுகளிடையே அமைந்திருக்கும் அரச மாளிகை ஒன்றில் அவர் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசிய இடம் ஒன்றுக்கு அவர் மாற்றப்பட்டார் என்றும்—

அதுபற்றிய விவரத்தை வெளியிட முடியாது என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனராம்.

(உ-3)

---

# ஒய்வூதியம் பெறுவதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும்!

'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை' என்ற கூற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஓய்வூதியம் பெறுவோர் இலரைப் பொறுத்தவரையில் உண்மையாகவே உள்ளது.

வவுச்சர்கள் இங்கு வந்துவிட்டால் மட்டும் போதாது. அந்தக் காகிதத்தை 'நோட்டாக' மாற்றிக் கொள்ள கொஞ்சம் அதிர்ஷ்டமும் வேண்டுமென்கிறார்கள் அவர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊரடங்குடன் சம்பந்தப்பட்ட விடயம்தான் இதுவும்.

'குமண' கப்பலில் தாமதமாக வந்த செப்டம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களை காசாக மாற்றுவதற்காக அன்றைய தினம் இலங்கை வங்கியின் யாழ் பிரதான கிளைக்கு எடுத்துச் சென்றவர்களுக்கு அதற்குரிய பணம் வங்கி அதிகாரிகளினால் வழங்கப்பட்டது. அதிர்ஷ்டக்கார ஓய்வூதியர்கள் அவர்கள்.

ஆனால் பாவம் — மேற்படி வங்கியின் யாழ் இரண்டாவது கிளையின் வாடிக்கையாளர்கள் துரதிஷ்டசாலிகள். 'ஊரடங்குச் சட்டமென்றாலும் கிளை திறந்திருக்கிறதே — அதிர்ஷ்டம்தான்' என கிழுந்தடித்துக் கொண்டு, தள்ளாத வயதிலும் அங்கு விரைந்து சென்ற அவர்களுக்கு ''இன்று ஊரடங்கு — வங்கி ஒரு மணித்தியாலம் மட்டுமே செயற்பட்டது. அதனால் இனித் திங்கட்கிழமை வாருங்கள்'' என்ற பதிலே கிடைத்தது.

'இந்த இரண்டு வங்கிக் கிளைகளும் நூறு யார் இடைவெளி தூரத்தில்தான் அமைந்திருக்கின்றன. ஊரடங்குச் சட்டமும் இரண்டுக்கும் பொதுவானதுதான். அப்படியென்றால் எமக்கு மட்டும் ஏன் இந்த ஏமாற்றம்?' என உதயனிடம் அங்கலாய்த்தனர் ஏமாற்றம் அடைந்த சிலர்.

பிரஸ்தாப வங்கிக் கிளை அன்று திறந்திருந்தபோதும் நாம் ஏன் ஏமாற்றப்பட வேண்டும்?' என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

(த-ம-10)

---

## தியத்தலாவையில் ஏற்பட்ட

# வெப்ப அதிகரிப்புக்கான காரணம் குறித்து விளக்கம்

தியத்தலாவை நரிமலைப் பகுதியில் ஏற்பட்ட உச்சக்கட்ட வெப்பநிலைக்கான காரணம் என்னவென்பது குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

எரிமலையின் விளைவே வெப்பநிலை உயர்வுக்குக் காரணம் என முன்னர் கருதப்பட்டது.

ஆனால் அங்கு ஆராய்ச்சி நடத்திய நிபுணர் குழுவின் தலைவர் பேராசிரியர் ஸீ பி. திஸாநாயக்கா, வெப்பநிலை உயர்வுக்கான காரணத்தை வெளியிட்டார்.

அழுகிய விலங்குகள், தாவரங்கள் போன்றவை ஒரே இடத்தில் பல வருட காலம் இருந்ததனால் ஏற்படும் அடையப் பொருள் வெப்பமடைவதால் இந்த நிலை ஏற்பட்டதாக ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது

50 தொடக்கம் 60 சதவீதம் வரை காபன் மூலகத்தைக் கொண்ட அடையப் பொருள் எரியும் போது அளவுக்கதிகமான வெப்பத்தை ஏற்படுத்துகிறது.

நரிமலையிலும் இவ்வாறான நிலையே ஏற்பட்டுள்ளது-

அழுகிய விலங்குகள், தாவரங்கள் என்பவற்றைக் கொண்ட அடையற் பொருள் அப்பகுதியில் காணப்பட்டுள்ளது.

அண்மையில் நிலவிய கடும் வரட்சியினால் நிலம் வெடித்ததனால் இத்தகைய அடையற்பொருள்கள் வெப்பமடைந்தன.

இலங்கையில் எரிமலை வெடிக்கும் சாத்தியம் இல்லை. — இப்படி அவர் கூறினார்

[உ-10]

---

### 482 தொண்டர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகுதி, தராதரம் போன்றவற்றைப் பரிசீலிக்கும் பொறுப்பை கல்விச்சேவை ஆணைக் குழு பணிப்பாளருக்கு வழங்கியுள்ளது

ஏற்கனவே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தராதரம் உடையவர்கள் கோட்டரீதியில் அழைக்கப்பட்டு, அவர்களின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட விருப்பதாகவும் —

இம்மாதம் இறுதிக்குள் நியமனம் வழங்கப்படும் என்றும் — பணிப்பாளர் தெரிவித்தார்.

[உ-3]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-09-92 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org